கோவையில் தி.மு.க. புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!







கோவையில் தி.மு.க. புதிய அலுவலகக் கட்டடப் பணிகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, வி.செந்தில்பாலாஜி, சு.முத்துச்சாமி, மு.கண்ணப்பன், பொங்கலூர் பழனிச்சாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, துணைப்பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், மாவட்டச்செயலாளர்கள் தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன், துரை செந்தமிழ்ச் செல்வன், மேயர் ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, பிரகாஷ், எம்.எல்.ஏ.கள் ஜெயராமகிருஷ்ணன், வசந்தம் கார்த்திகேயன், தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், முன்னாள் எம்.எல்.ஏ. சந்திரகுமார், தி.மு.க. மற்றும் திராவிடர் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கொலை – கொள்ளை – விலைவாசி – மின் கட்டணம் – தொழில்கள் முடக்கம்!

எதற்குமே த.வெ.க. ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை!

தி.மு.கழகம் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.6-

தி.மு. கழகம் வெளியிட்டுள்ள வலைதளப் பதிவு வருமாறு:-

தொழில்கள் முடங்குகின்றன. வருமானம் இல்லை. விலைவாசி விண்ணை தொடுகிறது. தினசரி கொலை சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்றன. நிறுவனங்கள் ஆந்திராவுக்கு செல்கின்றன. மின்கட்டணம் கழுத்தை நெரிக்கிறது. எதற்குமே இன்றைய த.வெ.க. ஆட்சியாளர்களிடம் தீர்வு இல்லை.

ரோடு ஷோ நடத்துகிறார்கள் அதுவும் மக்களுக்கு சலித்துவிட்டது. நேற்று முன்தினம் பெருந்துறையில் அட்டர் ப்ளாப். வேறு வழி தெரியாமல் ஆட்சி கவிழ்ப்பு என்ற பழைய பல்லவியை தூக்கி கொண்டு வருகிறார் கலைக்சன் குமார்.

போலீஸ் உங்களிடம் இருக்கிறது; சி.பி.சி.ஐ.டி. உங்களிடம் இருக்கிறது. நடவடிக்கை எடுங்கள். யார் தடுத்தார்கள்?

அ.தி.மு.க. ஆட்களை எல்லாம் இழுத்து குதிரை பேரம் நடத்திவிட்டு திமுகவினரை குதிரை பேர வழக்கில் தேடுகிறோம் என்று ஒரு மாதத்தை ஓட்டினார்கள். கிணற்றில் போட்ட கல்லாக அதில் ஒரு முன்னேற்றமும் இல்லை. இப்போது மீண்டும் அதே கதை. அதே பிரேக்கிங் நியூஸ். இன்னொரு மாதத்தை ஓட்டலாம் என்று திட்டமா?

பண்டிகை காலத்தில் மக்கள் வேதனையின் உச்சத்தில் இருக்கிறார்கள். கொஞ்சமாவது அவர்களை குறித்து சிந்தியுங்கள். வெறும் பரபரப்பான செய்திகளை ஊடங்களுக்கு கொடுத்து கொண்டேயிருந்தால் வீடுகளில் உலை பொங்காது.



இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியாரின் அறிவுலகம்தான் இன்றும் என்றும் தேவை

தமிழா அறிவு கொள்! பகுத்தறிவைப் பயன்படுத்து!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, நவ.6-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தமிழா அறிவு கொள்! பகுத்தறிவைப் பயன்படுத்து என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

"தமிழா அறிவு கொள்!

பகுத்தறிவைப் பயன்படுத்து!

அறிவுதான் இறுதியில் வெல்லும்; உறுதியாய் வெல்லும்!" என்று சொன்ன பெரியாரின் அறிவுலகம்–தான் இன்றும் என்றும் தேவை.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



ரூபாய் 5000 கோடி மோசடி வழக்கில் – த.வெ.க.வுடன் தொடர்புடைய

பிரேம்குமாருக்குச் சொந்தமான இடங்களில் சோதனை!

அமலாக்கத்துறையினர் நடவடிக்கை!

சென்னை, நவ.6-

5 ஆயிரம் கோடி ரூபாய் மோசடி வழக்கில் பிஎல்எம் ஹவுசிங் மற்றும் கிரெடிட் சொசைட்டி தலைவர் பிரேம்குமார் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் முதலீடு செய்த டெபாசிட் தொகைகளுக்கு அதிக வட்டி தருவதாகக் கூறி ஏமாற்றியதாகவும், அந்தப் பணத்தை முதலீட்டாளர்களுக்குத் திருப்பித் தராமல் தனது சொந்த கணக்குகளுக்கும், உறவினர்களின் கணக்குகளுக்கும் திசைதிருப்பியதாகவும் பிஎல்எம் ஹவுசிங் மற்றும் கிரெடிட் சொசைட்டி தலைவர் பிரேம்குமார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் சுமார் 300 ஏக்கர் நிலம் வாங்கியது, ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், திரையரங்குகள் உள்ளிட்ட தொழில்களில் முதலீடு செய்தது, தமிழக கேபிள் டிவி நிறுவனத்துக்கு 16 கோடி ரூபாய் பணப் பரிமாற்றம் செய்தது உள்ளிட்டவை குறித்தும் கேரள குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கு தொடர்பாக கேரள பொருளாதார குற்றத்தடுப்பு போலீசார் சென்னையில் வைத்து கடந்த அக்டோபர் 29 அன்று பிரேம்குமாரை கைது செய்தனர். இதன் தொடர்ச்சியாக பிரேம்குமார் மீது அமலாக்கத்துறையும் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், சென்னையில் பிரேம்குமார் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். கடந்த ஜூலை 2026ல் பிரேம்குமார் தமிழக முதல்வர் விஜய்யைச் சந்தித்த புகைப்படம் வெளியானது. மேலும், பிரேம்குமாருக்குச் சொந்தமான நிறுவனத்தின் பேருந்துகள் தவெகவின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சட்டமன்றத் தேர்தல் முடிந்து சட்டமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, தவெக சட்டமன்ற உறுப்பினர்கள், பிரேம்குமாருக்குச் சொந்தமான பேருந்துகளிலேயே அழைத்து வரப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஓய்.பி.எம். பாலாஜி அலுவலகத்திலும் சோதனை!

இதனிடையே முதலமைச்சர் விஜய் முதல், அமைச்சர்கள் வரை நெருங்கிய தொடர்புடைய ஓய்.பி.எம். பாலாஜியின் கோயம்பேடு அலுவலகத்திலும் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். 5 ஆயிரம் கோடி ரூபாய் மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பிரேம்குமாரின் தொழில் பங்குதாரராக இருப்பவர் ஓய்.பி.எம். டிரான்ஸ்போர்ட் நிறுவன உரிமையாளர் பாலாஜி என்பது குறிப்பிடத்தக்கது.

யானைகள் இடமாற்றம்: பா.ஜ.க. அடிமையான த.வெ.க. அரசை

சந்தர்ப்பவாத கூட்டணிக் கட்சிகள் கேள்வி கேட்காததேன்?

தி.மு. கழக ஐ.டி. பிரிவு வினா!

சென்னை, நவ.6-

பா.ஜ.க.வின் அடிமையான த.வெ.க.வை கேள்வி கேட்காமல் சந்தர்ப்பவாதக் கூட்டணிக் கட்சிகள் வேடிக்கை பார்த்து கொண்டிருப்பதாக தி.மு.க. ஐ.டி., விங் விமர்சித்துள்ளது.

தி.மு.க. ஐ.டி., விங் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், அசாமில் இருந்து யானைகளை எடுத்து வரும் விவகாரத்தில், த.வெ.க. அரசு பா.ஜ.க.வின் கைப்பாவையாகச் செயல்பட்டது வெட்டவெளிச்சமாகியுள்ளது! என்று சாடியுள்ளது. சாதாரண மக்கள் ஒரு சான்றிதழ் வாங்க மாதக்கணக்கில் அலைய வேண்டும். ஆனால், பா.ஜ.க.வுக்கு நெருக்கமான ஒருவருக்காக வெறும் 8 மணிநேரத்தில் த.வெ.க. அரசு யானை இடமாற்றத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறது!

பா.ஜ.க.வுக்குச் சேவை செய்யும் த.வெ.க. அரசைக் கேள்வி கேட்க வக்கில்லாமல், சந்தர்ப்ப வாதக் கூட்டணிக் கட்சிகள் வாய்மூடிக் கிடக்கின்றன என்று விமர்சித்துள்ளது. "ஆர்.எஸ்.எஸ் பெற்றெடுத்த பிள்ளை விஜய்" என்று கூட்டணிக் கட்சித் தலைவர் சொன்னதை இப்போது நிரூபித்து விட்டது த.வெ.க. அரசு! பா.ஜ.க.வின் ஒவ்வொரு செயலுக்கும் த.வெ.க. துணை போகிறது. அதை சந்தர்ப்பவாத கூட்டணிக் கட்சிகள் கை கட்டி வாய் பொத்தி வேடிக்கை பார்க்கின்றன! என்று தி.மு.க. ஐ.டி., விங் சாடியுள்ளது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

ஆரல்வாய்மொழி பேரூர்க் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

கன்னியாகுமரி, நவ.6-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை கிழக்கு ஒன்றியம், ஆரல்வாய்மொழி பேரூர் தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது (03.11.2026 - செவ்வாய்க்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில் ஆரல்வாய்மொழி பேரூர் செயலாளர் கு.சுப்பிரமணியன் தலைமையில், தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் த.செல்வன் முன்னிலையில் ஆரல் வாய்மொழி, பைபாஸ் சாலை, ராயல் உணவகம் அருகில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தின் இறுதியில் கழக நிர்வாகி தாமோதரன் ஏற்பாட்டில் ஆரல்வாய் மொழி பேரூர் கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் தீபாவளி பரிசுகளை வழங்கினார்.